APR 2010

சுருக்கம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோவையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நினைவாக கோவை மத்திய சிறை வளாகத்தில் உலகத்தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா அமைத்தல் - கோவை, மத்திய சிறை நிலத்தில் முன்நுழைவு அனுமதி வழங்கி ஆணை - வெளியிடப்படுகிறது.

உள் (சிறை.4) துறை

அரசு ஆணை (நிலை) எண். 350 நாள்.06.04.2010

படிக்க:-

1) மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் கடித எண்.31243/2009/ஆ4, நாள்.31.01.2010

2) கூடுதல் காவல் துறை இயக்குநர்/சிறைத்துறை தலைவர், சென்னை கடித எண்.46836/ஆப3/2009, நாள்.09.02.2010

ஆணை:

மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துவதன் நினைவாக சிறைத்துறைக்கு சொந்தமான நிலத்தில் தாவரவியல் பூங்கா அமைப்பதற்கு சிறைத்துறை நிலத்தில் முன்நுழைவு அனுமதி வழங்கக் கோரும் செயற்குறிப்பின் மீது கூடுதல் காவல் துறை இயக்குநர்/சிறைத்துறை தலைவர் கீழ்க்கண்ட கருத்தினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2 (அ) புதிய நுழைவாயில் மற்றும் சோதனை செய்யும் அறை கட்டுதல்:-

பூங்கா சாலை உள்ள இடத்தினை, தாவரவியல் பூங்கா அமைப்பதற்கு ஒப்படைத்தால் அந்த நுழைவாயிலுக்குப் பதில், டாக்டர் நஞ்சப்பா சாலையில் உள்ள நுழைவு வாயிலை பிரதான வாயிலாக பயன்படுத்தலாம். அவ்வாறு நுழைவு வாயிலை மாற்றுவதால், பூங்கா நுழைவு வாயிலின் அருகில் உள்ள பார்வையாளர்கள் ஆளறியும் அறை மற்றும் சோதனை அறையினை (Visitors Identification) டாக்டர் நஞ்சப்பா சாலையில் உள்ள நுழைவு வாயிலில் மாற்றியமைத்தல் வேண்டும். அவ்வாறு மாற்றி அமைத்தால் ரூ.15,00,000/- செலவில் மனு எழுதும் அறை மற்றும் சோதனை அறை மற்றும் மேற்கு நுழைவு வாயிலில் பாதுகாப்பு சுவர் ஆகியவை கட்டுதல் வேண்டும்.

2. (ஆ) சிறை உயர் அலுவலர் குடியிருப்பு மற்றும் அலுவலகம் ஆகியவை கட்டுதல்:-

தற்போது செம்மொழி பூங்காவிற்காக மாவட்ட ஆட்சித்தலைவரால், முன்நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ள நிலத்தில் கீழ்க்காணும் அலுவலகம் மற்றும் அலுவலர்களின் குடியிருப்புகள் உள்ளன.

1. சிறைத்துறைத் துணைத் தலைவர் குடியிருப்பு
2. சிறைத்துறை துணைத் தலைவர் அலுவலகம்
3. சிறைக் கண்காணிப்பாளர் குடியிருப்பு
4. கூடுதல் கண்காணிப்பாளர் குடியிருப்பு
5. டிராக்டர் ஓட்டுநர் குடியிருப்பு
6. காவலர் குடியிருப்பு –12 எண்கள்

சிறைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோர் சிறைகளில் ஏற்படும் அவசர நேர்வுகளைச் சமாளிக்கவும், இரவு நேரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை திடீர் பார்வையிட வேண்டியது இருப்பதாலும், இவர்களுக்கு சிறைச்சாலை வளாகத்திலேயே குடியிருப்பு கட்டுவது மிகவும் இன்றியமையாததாகும். மேலும், கோவை சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் அலுவலகத்தில் ஏற்கனவே, 1996-ம் ஆண்டில் குண்டு வெடிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் கோவை சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் மற்றும் அலுவலகப் பாதுகாப்பு நலன் கருதி கோவை சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் அலுவலகம் மற்றும் குடியிருப்பினை அதே வளாகத்தில் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே, டாக்டர் பாலசுந்தரம் சாலைக்கு அருகில் பட்டு வளர்ச்சித்துறை அலுவலகம் அருகில் கோவை சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் அலுவலகம், சிறைத்துறைத் துணைத் தலைவர் குடியிருப்பு மற்றும் சிறைக் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோரின் குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்பட வேண்டும். இதற்காகும் மொத்த செலவினமாக ரூ.161.80 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு ஒன்றினை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

2 (இ) குடியிருப்புகள் கட்டும் வரை தற்காலிக ஏற்பாடு:-

புதிய குடியிருப்புகள் கட்டும்வரை தற்காலிக ஏற்பாடாக கோவை சரக சிறைத்துறை துணைத் தலைவர் அலுவலக கண்காணிப்பாளரின் குடியிருப்பு மற்றும் கோவை மத்திய சிறை சமூகவியல் வல்லுனர், நேர்முக உதவியாளர், அலுவலக மேலாளர் ஆகியோரின் குடியிருப்புகள் உரிய மராமத்து பணிகள் செய்து சிறை உயர் அலுவலர்களை குடியமர்த்தலாம் என குறிப்பிட்டு, இதற்காக தோராய செலவீனம் ரூ.16.00 இலட்சம் ஆகும் என பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளதாக கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறை தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

2 (ஈ) அலுவலர்களின் தற்காலிக குடியிருப்பு:-

சிறை உயர் அலுவலர்களுக்கு கோவை சரக சிறைத்துறை துணைத்தலைவர் அலுவலக கண்காணிப்பாளர் மற்றும் கோவை மத்திய சிறை சமூகவியல் வல்லுனர், நேர்முக உதவியாளர், அலுவலக மேலாளர், ஆகியோரின் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யும் போது மேற்படி பணியாளர்கள், 12 காவலர்கள் மற்றும் ஒரு டிராக்டர் ஓட்டுநர் ஆகியோருககு கோவை நகரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான குடியிருப்புகளை மராமத்து செய்து ஒதுக்கீடு வழங்கலாம் எனவும் இதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இசைவு தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் மேற்படி பணியாளர்களுக்கு நிரந்தர குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.1,22,00,000/- செலவீனத்தில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

3) கவாத்து மைதானம்:-

மேலும், தற்போது செம்மொழி பூங்காவிற்காக ஒதுக்கீடு வழங்கப்பட உள்ள இடத்தில் உள்ள கவாத்து மைதானத்திற்குப் பதில் புதிய கவாத்து மைதானம் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு புதிய கவாத்து மைதானம் அமைக்கப்படும் பட்சத்தில் அதற்கு தோராயமாக ரூ.99.00 இலட்சங்கள் செலவினம் ஆகும் என தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

4) நான்கு ஆள்துளை கிணறு:-

தற்போது செம்மொழி பூங்காவிற்காக ஒதுக்கப்பட உள்ள இடத்தில் உள்ள நான்கு ஆழ்குழாய் கிணறுகள் மூலமாகப் பெறப்படும் தண்ணீரே கோவை மத்திய சிறையில் உள்ள 2500 சிறைவாசிகள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது. எனவே இதனை தொடர்ந்து பயன்படுத்தும் வகையில் இந்த ஆழ்குழாய் கிணறுகள் சிறைத்துறையின் கட்டுப்பாட்டிலேயே இருக்க அனுமதிக்க வேண்டும். பூங்கா அமைக்கும் பொழுதோ அல்லது கிணறுகள் தோண்டும் பொழுதோ எக்காரணத்தை கொண்டும் கோவை மத்திய சிறைக்கு உபயோகப்படுத்தப்படும் தண்ணீரின் அளவு குறையாமல் இருத்தல் வேண்டும். அவ்வாறு ஏற்பட வாய்ப்பு இல்லாது இருந்தால் கோவை மத்திய சிறைக்கு தேவைப்படும் தண்ணீரை கோவை மாநகராட்சி மூலம் வழங்கப்பட வேண்டும்.

5) தொடர்கம்பி வேலி அமைத்தல்

சிறைத்துறைக்கு சொந்தமான இடங்களை தாவரவியல் பூங்காவிற்கு மாற்றம் செய்வதால், பூங்காவிற்கும், சிறைக்கும் தடுப்பு ஏற்படுத்தும் வண்ணம் தற்காலிகமாக ( Chain Link Fencing ) அமைக்கப்பட வேண்டும். இதற்கு தோராயமாக ரூ.12,00,000/– செலவாகும் என பொதுப்பணித்துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறை தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

6) மேலும் அவர் தனது கருத்துருவில் தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி 2 விதி எண். 362–ன்படி, சிறையைச் சுற்றி குறைந்த பட்சம் 180 மீட்டர் சுற்றளவு பாதுகாக்கப்பட்ட இடமாக இருத்தல் வேண்டும். அதன்படி சிறையின் முன்புறம் 180 மீட்டர் பாதுகாக்கப்பட்ட இடம் அமைத்தால், தற்போது மாவட்ட ஆட்சியரால் செம்மொழி பூங்காவிற்காக கோரப்பட்டுள்ள இடத்தில், பெரும்பாலான இடங்கள் ஒதுக்கீடு செய்ய இயலாநிலை ஏற்படும். மேலும் சிறைவளாகத்தில் ஏற்கனவே 180 மீட்டர் சுற்றளவுக்கு உட்பட்ட இடத்தில், பட்டு வளர்ச்சித்துறை அலுவலகம், வருங்கால வைப்பு நிதி அலுவலகம், ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, கோவை வடக்கு வட்ட அலுவலகம் ஆகியவை அமைந்துள்ளது. இதனை சிறப்பு நேர்வாக கருதி அரசு 120 மீட்டர் சுற்றளவுக்கு சிறையின் பாதுகாக்கப்பட்ட இடமாக மாற்றம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு மாற்றும் பட்சத்தில் தாவரவியல் பூங்காவிற்காக, தற்போது கோரப்பட்டுள்ள கீழ்க்காணும் இடங்கள், சிறையின் சுற்றுச்சுவருக்கு மிக அருகாமையில் உள்ளன.

| பிளாக் | நகர அளவை எண் | பரப்பளவு – ஹெக்டேர் |
|---|---|---|
| 27 | 1/பாகம் | 0.3932.0 |
| | 2/பாகம் | 0.2565.0 |
| | 14/பாகம் | 0.4718.5 |
| | 15/பாகம் | 0.5568.0 |
| | | 1.6783.5 |

மேற்கண்ட இடங்கள் சிறையின் சுற்றுச்சுவருக்கு மிக அருகாமையில் (120 மீட்டர் சுற்றளவுக்குள்) இருப்பதாலும், இந்த இடத்தினை வழங்குவதால், சிறைப் பாதுகாப்புக்கு இடையூறு ஏற்படும் என்பதாலும், பூங்கா பகுதியிலிருந்து வெளிநபர்கள் தடை செய்யப்பட்ட

பொருட்களை சிறைக்குள் எறிவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதாலும், போராட்ட சிறைவாசிகள் அனுமதிக்கப்படும் காலங்களில் அதற்கான வசதிகள் செய்வதற்கும், இந்த இடங்கள் கண்டிப்பாகத் தேவைபடும் எனக் குறிப்பிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரால் முன்நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ள 49.40 ஏக்கர் நிலத்தில் மேலே பிளாக் 27ல் குறிப்பிட்டுள்ள 1.67 ஹெக்டேர் நிலத்தை தவிர மற்ற இடங்களில் தாவரவியல் பூங்கா அமைவதற்கு மாவட்ட ஆட்சியருக்கு சிறைத்துறை நிலத்தில் முன்நுழைவு அனுமதி வழங்கலாம் என அரசுக்கு பரிந்துரைத்துள்ளார். மேலும், அவர் தனது செயற்குறிப்பில் பார்வையாளர்கள் ஆளறியும் அறை மற்றும் சோதனை அறை (Visitors Identification) கட்டுவதற்கு ரூ.15,00,000/- சிறை உயர் அலுவலர்களுக்கு தற்காலிகமாக ஒதுக்கீடு கோரும் குடியிருப்புகளை மராமத்து செய்வதற்கு ரூ.16,00,000/- அவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.161,80,000/- சிறை அலுவலர்களின் நிரந்தர குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.122,00,000/- கவாத்து மைதானம் அமைப்பதற்கு ரூ.99,00,000/- மற்றும் பூங்காவிற்கும் சிறைக்கும் தற்காலிக தடுப்பு ஏற்படுத்துவதற்கு (Chain Link Fencing) ரூ.12,00,000 ஆக மொத்தம் ரூ.425,80,000/- நிதி ஒதுக்கீடு வழங்கும்படி அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

7. கூடுதல் காவல்துறை இயக்குநர்/ சிறைத்துறை தலைவர் கருத்துருவை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

i) கோவை மாவட்ட ஆட்சியரால் தாவரவியல் பூங்கா அமைப்பதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கக் கோரப்பட்டுள்ள 49.40 ஏக்கர் சிறைத்துறை நிலத்தில் பிளாக் 27 நகர அளவை எண் பாகம் 1-ல் 0.3932.0 ஹெக்டேர், பாகம் 2-ல் 0.2565.0 ஹெக்டேர், பாகம் 14-ல் 0.4718.5 ஹெக்டேர், பாகம் 15-ல் 0.5568.0 ஹெக்டேர், ஆக மொத்தம் 1.67 ஹெக்டேர், இடங்களை தவிர்த்து ஏனைய இடங்களில் அரசின் முன் அனுமதியுடன் முன்நுழைவு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

ii) மேற்கண்டவாறு முன் அனுமதி வழங்குவதால் கீழ்க்கண்ட பணிகளை மட்டும் மேற்கொள்வதற்கு ரூ.43,00,000/- (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| Sl.No | Description | Approximate Cost (in Rs) |
|---|---|---|
| 1 | Construction of frisking room, waiting shed, petition writing room and toilets etc, in the west gate in the Central Prison, Coimbatore | 8,00,000.00 |
| 2 | Construction of compound wall in the west gate in the Central Prison, Coimbatore | 7,00,000.00 |
| 3 | Construction of chain link fencing around the Botanical Garden at Coimbatore | 12,00,000.00 |
| 4 | Repairs to the D I G quarters in the Central Prison, Coimbatore (Old Personal Assistant Quarters) | 4,00,000.00 |

| | | |
|---|---|---|
| 5 | Repairs to the Superintendent quarters in the Central Prison, Coimbatore (Old office Superintendent quarters) | 4,00,000.00 |
| 6 | Repairs to the Additional Superintendent quarters in the Central Prison, Coimbatore (Old office Manager quarters) | 4,00,000.00 |
| 7 | Repairs to the Additional Superintendent quarters in the Central Prison, Coimbatore (old Social Case work expert Quarters) | 4,00,000.00 |
| | **Total** | **43,00,000.00** |

iii) தற்போது செம்மொழி பூங்காவிற்காக ஒதுக்கப்பட உள்ள இடத்தில் உள்ள நான்கு ஆழ்குழாய் கிணறுகள் மூலமாகப் பெறப்படும் தண்ணீரை சிறைத்துறை தொடர்ந்து பயன்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் ஆழ்குழாய் கிணறுகளைப் பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் ஆகிய பணிகள் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது.

iv) நிலத்தினை நகராட்சி நிர்வாகத் துறையின் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு நிலமாற்றம் அனுமதி வழங்கப்படுகிறது. உலகத் தமிழ் செம்மொழி மாநாடு அறக்கட்டளை அமைத்தபின் நிலத்தினை நகராட்சி நிர்வாகத்துறை உலகத் தமிழ் செம்மொழி மாநாடு அறக்கட்டளைக்கு நிலமாற்றம் செய்யப்படவேண்டும்.

v) மேற்படி நிலமாற்றம் தொடர்பாக குடியிருப்புகளை இழக்க நேரிடும் சிறைத்துறைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகளை தற்போது சிறைத்துறையில் குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் அதே நிபந்தனைகளுடன் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

8. மேலே பத்தி 7(ii)-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையானது, கீழ்கண்ட கணக்கு தலைப்புக்களின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

| | | |
|---|---|---|
| i) | 4059. பொதுப்பணிகள் குறித்த மூலதனச்செலவு - 01. அலுவலகக் கட்டடங்கள் - 051. கட்டுமானம் - I திட்டத்தில் சேராதது - AF சிறைகள் - 16. பெரும் பணிகள்<br>(த.தொ.கு 4059 - 01 - 051 - AF - 1602) | - ரூ.27,00,000 |
| ii) | 2216. வீட்டு வசதி - 01. அரசுக் குடியிருப்புக் கட்டடங்கள் - 106. பொதுத்தொகுப்பு இடவசதி - I திட்டத்தில் சேராதது - AS சாதாரண பழுதுபார்ப்புப்பணிகள் - 18. பராமரிப்பு - 01. குறித்த காலப்பராமரிப்பு<br>(த.தொ.கு. 2216 - 01 - 106 - AS - 1817) | - ரூ.16,00,000 |

9. மேலே பத்தி 7 (இனம்-ii)-ல் ஒப்பளிக்கப்பட்ட நிதியை பெற்று பொதுப்பணித்துறையிடம் அளிப்பதற்கு கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. மேலே பத்தி 7(ii)-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை புதுப்பணி குறித்த செலவினமாகும். இதற்கான அனுமதியை சட்டமன்றப் பேரவையிலிருந்து பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையில் பெறப்படும் அனுமதியை எதிர்நோக்கி, இச்செலவினத்தை அரசின் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். இந்நிதியை பெறுவதற்கு தலைமை பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள் இதற்கான உரிய படிவத்தில் அரசின் நிதித் (வரவு செலவு பொது-1) துறைக்கு விண்ணப்பிக்கவேண்டும். மேலும், இச்செலவினத்தை 2010-2011ம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு ஏதுவாக, இத்திட்டம் குறித்த விரிவான விளக்கக்குறிப்பினை அரசின் நிதி (வரவு செலவு பொது-1) துறைக்கு தலைமை பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை சென்னை தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

11. இவ்வரசாணை வீட்டு வசதி (மற்றும்) நகர்ப்புற வளர்ச்சி துறையின இசைவை அ.சா.எண்.7664/HB-5/2010-1, நாள் 01.04.2010 மற்றும் நிதித்துறையின் இசைவினை அ.சா.எண்.134/JS (Pr)/HII/2010-1, நாள்.06.04.2010 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.08 (எட்டு) பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறை தலைவர், சென்னை-8.
முதன்மை செயலாளர் மற்றும்
நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
நகராட்சி நிருவாக ஆணையர்,
எழிலகம், இணைப்பு கட்டடம்,
சேப்பாக்கம், சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சேப்பாக்கம், சென்னை-5.
மாநில கணக்காயர் அலுவலகம் (தணிக்கை), சென்னை-18
மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்டம்.
மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர்,
உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கோவை.
சிறைத்துறை துணைத் தலைவர், கோவை சரகம்.
கண்காணிப்பாளர், மத்திய சிறை, கோவை.

நகல்
நிதி (உள்-II/பொ.ப.1 /வ.செ.பொ-1/II துறை), சென்னை-9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 7/4/2010